4th February 1966]

மதுரை நகர்

*99 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரை விரிவுபடுத்தி கவர்ச்சியான நகரம் ஆக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) மதுரை நகராட்சிக் கமிஷனர் குறிப்பிட்ட சில கிராமங்களை மதுரை நகராட்சிக்குள் சேர்க்க வேண்டுமென்று சில செயற்குறிப்புகளை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார். அவை ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

சேதுக் கால்வாய் திட்டம்

*100 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேதுக்கால்வாய் திட்டத்திற்கான இறுதி எஸ்டிமேட் (Final Estimate) தயாரிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனில், அதன் உத்தேச மதிப்பீடு எவ்வளவு ?

(உ) இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் முடிவு என்ன ?

கனம் திரு. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) முதல் (உ) வரை : சேது சமுத்திரத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவை இந்திய அரசு இன்னும் இறுதியாக முடிவுசெய்யவில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*— An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED LAWLESSNESS IN THE OFFICE OF 'DAILY THANTHI'.

MR SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss the alleged situation arising out of lawlessness in the office of the 'Daily Thanthi'. I would like to know how it is a matter of public importance. Is it not a matter concerning a few individuals only ? I think the matter does not involve more than ordinary administration of law. Anyway the hon. Member may explain how the matter comes under an adjournment motion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க உரிமையுண்டு. அந்தக் கட்டடம் ஒரு பத்திரிகையாலயத்திற்கு, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்கலாம். நான் தினத் தந்தி' பத்திரிகையாலயத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். முதலாளியே அடியாட்களை வைத்து தொழிலாளர்களை 'வேலையிலி

ருந்து வெளியே போ; இல்லாவிட்டால் உயிரையே எடுத்து விடுவோம்' என்று கூறி அவர்களை அடிக்கிறார்கள். தனிப்பட்டவர்களுடைய சொந்தக் குடும்ப விஷயமாக இருந்தால் கூட அங்கு கொலை பண்ணுகிறார்கள் என்றால் அதை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ? அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களைச் சங்கத்தில் இருந்து விலக்க வேண்டுமென்பதற்காக, முதலாளியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்பதற்காக முதலாளி அடியாட்களை ஏவி அந்தக் கட்டடத்திற்குள்ளேயே தொழிலாளர்களை அடிக்கிறார்கள். இந்த நாட்டில் அரசாங்கம் இருக்கிறது என்ற பயம் கூட இல்லாமல் இந்தக் காரியம் அங்கு நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் மீது பயமுறுத்தல் தொடர்ந்து நடந்து வருகிறது. அங்கு அமைதியை நிலைநாட்ட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அங்கு அமைதி ஏற்படத் தவறினால் அமைதி ஏற்படுகிற வரையில் பத்திரிகையாலயத்தைத் திறக்கக்கூடாது என்று மூடிவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும்.

MR. SPEAKER : What for are the Police and the Courts of Law there ? The hon. Member comes direct to the Legislature. There are the Police and the Courts of Law that can be approached in such matters for obtaining an order under Section 144, Criminal Procedure Code, and for getting protection against alleged harassment.

திரு. மீ. கலியாணசுந்தரம் : போலீசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். போலீசார் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஏமாற்ற என்னென்ன தந்திரங்களைக் கையாள வேண்டுமோ, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களைக் கையாள்கிறார். அவருக்கு எதிராக போலீஸ் சக்தியற்றதாக இருக்கிறது. இதை நான் அரசாங்கத்தின் விசேஷ கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் தகராறுப் பிரச்சினை ஒன்று; மற்றொன்று ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுவது. எதைப் பற்றி இருந்தாலும், சம்பந்தப்பட்டவர்கள், முக்கியமாகத் தொழிலாளர்கள் அரசாங்கத்திடம் புகார் செய்தால் அதற்கு மேல் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். இதற்கு முன்பு புகார் வந்து ஓரளவு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே யாருடைய செல்வாக்குக்கோ உட்பட்டிருக்கிறார்கள், பாரபட்சமாக நடக்கிறார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. ஆகவே, மேலும் ஏதாவது சம்பந்தப்பட்டவர்களுக்குக் குறை இருந்தால் அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்து நிவாரணம் இல்லையென்றால் பின்னர் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவித்தால் சட்டத்திற்கு உட்பட்டு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4th February 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள், அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக நான் சொன்னதாகச் சொன்னார்கள். அவ்வாறு நான் சொல்லவில்லை. ஆனால், அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை போதுமானதாக இல்லையென்று சொன்னேன். அந்தத் தொழிலாளர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் அறிக்கையை கொடுத்து குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்டுவதிலே முதலாளிக்குப் பொறுப்பு உண்டு. அதை அவர் செய்யத் தவறினால் அந்தப் பத்திரிகையாலயத்தை திறக்கக் கூடாது என்று உத்தரவு போடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

MR. SPEAKER : What is it that the hon. Member expects? Does he expect this House to direct anybody to pass an order under Section 144?

SRI M. KALYANASUNDARAM : This House can direct the Government.

MR. SPEAKER : How can that be done without observing due process of law?

SRI M. KALYANASUNDARAM : Section 144 is only preventive in character.

MR. SPEAKER : Yes. It is preventive. But, even if it is preventive action, it must be taken according to the procedure to be followed.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கம் ஊர்வலம் நடத்துவதைத் தடை செய்யவில்லையா? கூட்டங்கள் நடத்துவதை அரசாங்கம் தடை செய்யவில்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Perhaps, there is one solution according to the hon. Member Sri M. Kalyanasundaram. If the hon. Member's suggestion has to be given effect to, this House must pass a resolution that what has been done is wrong on the part of the proprietor of the newspaper. Then the proprietor of the newspaper could be hauled up for contempt of the House. That is the only course that could be adopted.

MR. SPEAKER : I do not think this is a matter which could be discussed here under an adjournment motion. Hence, I withhold my consent to it.

(2) ALLEGED UNREST IN VELLORE OVER LEASE OF LAND TO CHURCH OF SOUTH INDIA.

MR. SPEAKER : The hon. Members Sri K. R. Sambandam and Sri M. Kalyanasundaram have given notice of another adjournment motion to discuss the alleged unrest in Vellore. The hon. Member Sri K. R. Sambandam is not in his seat. So the hon. Member Sri M. Kalyanasundaram may explain how this matter can be considered under an adjournment motion.